SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை

வைகாசி, 2012.

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu
sondak@eureka.lk

No. 19, Saravana Road
Kallady Batticaloa.
sondbati@eureka.lk

60'' Arasady Road
Jaffna
sondjf@eureka.lk



# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## பாலர் பாடசாலை

2012.05.11 ஆம் திகதி அன்று எமது அமைப்பின் பணியாளர்களான விஜயகுமார்,சுரேஸ்குமார் ஆகியோர் அம்மன் பாலர் பாடசாலைக்கு களவிஜயம் மேற்கொண்டு மாணவர்களுக்கு children song,நீதிக்கதைகள் ஆகியவை திரையிட்டுக் காண்பிக்கப்பட்டது. இத்திரைப்படக்காட்சியில் 06 ஆண்களும், 07 பெண்களும் உள்ளடங்கலாக 13 மாணவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.





## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 40 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்

இம் மாதம் நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 4 கலந்துரையாடல் ,நடை பெற்றுள்ளது இதில் 41 ஆண், 43 பெண்ணுமாக மொத்தம் 84 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.

*கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள்.*

1. ஆரம்பத்தில் சிறுவர்களினால் 03 நிதி சேகரிப்பு காட்டினை பயன்படுத்தி பணம் அறவிட்டு வழங்கப்பட்டது. ஆனால் தற்போது சிறுவர்களின் வரவு குறைவான காரணத்தினால் அனைத்து சிறுவர்களின் சார்பாக கழக பொருளாளரான செல்வி.ரீத்திகா என்பவரிடம் ஒரு நிதிசேகரிப்பு காட் வழங்கப்பட்டது. அதற்கமைவாக அனைத்து சிறுவர்களும் பணத்தினை சேகரித்து அவரிடம் ஒப்படைக்குமாறு கூறப்பட்டது.

2. இம் மாதம் சிறுவர்களுக்கிடையே கற்றல் செயற்பாடுகள் நடாத்தப்பட்டுள்ளது.





SOND

# சிறுவர் திட்டம்

## சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. இம் மாதம் காந்தி கழக 5 உறுப்பினர்கள் நிதிசேகரிப்பு காட்டினை கிராமங்களுக்குச் எடுத்துச் சென்று நிதிசேகரிப்பு பணமாக 250 ரூபா சேகரித்து எமது அமைப்பிடம் ஒப்படைத்தார்கள்.

02. இம் மாதம் சிறுவர்களால் அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இரண்டு சிரமதான நிகழ்வும், அக்கரைப்பற்று-08 பிரிவில் இரண்டு நடமாடும் நூலக சேவையும் மேற்கொள்ளப்பட்டது. இதில் 17 ஆண், 28 பெண்கள் உட்பட 45 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.

## SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

1. காந்தி கழக சிறுவர்களுக்கு நான்கு ஆங்கில வகுப்பு பணியாளரான சுரேஸ்குமார் அவர்களினாலும் ,இரண்டு கணணி தியேரி வகுப்பு பணியாளரான ஜெனிதா அவர்களினாலும் நடாத்தப்பட்டது. ஆங்கில வகுப்பில் 56 பேரும் கணணி வகுப்பில் 25 பேரும் கலந்து கொண்டுள்ளார்கள்.
2. இம் மாதம் காந்தி கழக சிறுவர்கள் நான்கு வகையான விளையாட்டுப்பொருட்களை 7 தடவைகள் பெற்று பயன்படுத்தினார்கள். அவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.
3. காந்தி கழக சிறுவர்களுக்கு நான்கு உளமகிழ்வூட்டும் திரைப்படக்காட்சி காண்பிக்கப்பட்டுள்ளது. இதில் 44 சிறுவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்





SOND

## மரம் நடல்

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கண்ணகிபுரம் பட்டிமேடு அம்மன் ஆலயத்திற்கு 42 நிழல் தரும் மரங்கள் எமது அமைப்பினால் வழங்கப்பட்டு அவை தற்பொழுது ஆலைய நிர்வாக சபையினாலே சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுவருகின்றது.





## அறநெறி பாடசாலை ஆசிரியருக்கான கலந்துரையாடல்.

சென்ற 2012.05.13 ம் திகதி ஆலையடிவேம்பு பிரதேசபிரிவிற்குட்பட்ட அறநெறி பாடசாலை ஆசிரியருக்கான கலந்துரையாடல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் தலைமையில் எமது அலுவலகத்தில் நடாத்தப்பட்டது. 42 ஆசிரியர்கள் கலந்துகொண்ட இக் கலந்துரையாடலிலே அறநெறி தொடர்பாக SOND அமைப்பினால் மேற்கொள்ளப்படக்கூடிய செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன் ஆசிரியர்களினுடைய செயற்பாடுகளும் கேட்டறியப்பட்டது.





SOND

# கணனி வகுப்பு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம் மாதம் 20 சிறுவர்கள் 18 தடவையும், 04 இளையோர்கள் 04 தடவையும் கணனியைப் பயன்படுத்தியுள்ளனர்.





# தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புப்த் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள் ஆகியோர் இம்மாதம் 9 தலைப்பில் 141 புத்தகங்களையும் 7 தலைப்பில் 37 இறு வெட்டுக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.





# கலந்துரையாடல், பயிற்சி

## திட்ட முன் மொழிவு தயாரிக்கும் கலந்துரையாடல்

திட்ட முன் மொழிவு தயாரிப்பதற்கான தகவல்கள் பெறும் கலந்துரையாடலானது 2012.05.24 ம் திகதி பணியாளர் விஜயகுமாரின் தலைமையில் எமது அலுவலகத்தில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

## வாராந்தக் கலந்துரையாடல்

அலுவலக, திட்டச் செற்பாடுகளுடைய முன்னேற்றத்தினையும் செயற்பாடுகளை விரைவாக செயற்படுத்துவதன் நோக்கத்தினை அடிப்படையாக கொண்டு. 4 வாராந்தக் கலந்துரையாடல்கள் இணைப்பாளர் விஜயகுமார் தலைமையில் எமது அலுவலகத்தில் நடாத்தப்பட்டது.

### பணியாளர் பயிற்சி

**PCA** அமைப்பினால் 2012.05.28 ம் திகதி அனுராதபுரத்தில் நடைபெற்ற பயிற்சியில் எமது அமைப்பின் சார்பாக விஜயகுமார் கலந்து கொண்டுள்ளார்.

SOND

# மட்டக்களப்பு மாட்டத்தின் செயற்பாடுகள்

## திறன்களை உயர்த்துதலும், சேவைகளையும் வளங்களையும் பெறும் நிலையை மேம்படுத்தலும்

**DIAKONIA** நிறுவன நிதியுதவியுடன் **SOND** அமைப்பின் அமுலாக்கத்தில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மண்டபத்தடி கமநல கேந்திர நிலையத்தின் கீழ் செயற்படும் 25 விவசாய அமைப்புக்களை வலுவூட்டலை நோக்காக கொண்டு சங்கங்களுடன் கலந்துரையாடல்கள், பயிற்சிகள், போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன அத்துடன் 12 விவசாய அமைப்புக்களிற்கு மதிப்பீடு மேற் கொள்ப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கீழ்வருமாறு.

- மானிய உரப்படிவம் பூர்த்தி செய்யப் பட்டு 09.05.2012 திகதிக்குள் அமைப்பிடம் ஒப்படைக்கவேண்டும்.
- **APC** யில் 14.05.2012 திகதி (உர மானியம் வழங்குதல்) வில் பண்ணுதல் அதற்கு விண்ணப்பிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும் கலந்து கொள்ளவேண்டும்.
- மாதாந்தம் ஒவ்வொரு 05ம் திகதியும் மாதாந்தக் கலந்துரையாடல் நான்கு (04.00) மணிக்கு நடாத்தப்படல் வேண்டும்.
- இம் மாதத்தில் இருந்து சந்தா,சேமிப்பு பணம் அறவிடப்படும். எனவே எதிர் வரும் மாதம் இம் மாதத்துக்குரிய பணமும் செலுத்த வேண்டும். மாதாந்தம் ரூபா 60 செலுத்த வேண்டும்
- ஓவ்வோரு மாதமும் 10ம், 20ம் திகதிகளில் நிருவாக கலந்துரையாடல் நடாத்தப்படும்
- சங்கத்தில் உள்ள அங்கத்தவர்களை 4 சிறுகுழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது







## மரம் நடுகை மற்றும் நகர் அழகுபடுத்தல் திட்டம்

கல்லடி மணிக்கூட்டுக் கோபுரம் முதல் ஊறணிச் சந்தி வரையான வீதி நடுப்பகுதியில் நிழல், நறுமணம் கொண்ட மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு இப்போது மாநகர சபையின் உதவியுடன் மரக்கன்றுகள் நீரப் பாசணம் செய்யப்பட்டு வருகின்றது.

இம் மாதம் 7 நாட்கள் மாத்திரம் 2 பொது நபர்களால் மரத்திற்க்கு நீர் ஊற்றப்பட்டு நடப்பட்ட மரங்கள் பராமரிக்கப்பட்டுள்து. மேலும் இக் காலப்பகுதிக்குள் 07 மரக் கன்றுகள் மீண்டும் அதற்குள் நடுகை செய்யப்பட்டதும் குறிப்பிடப்பட்டது.



## முன்பள்ளிப் பாடசாலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலைநகர், புதுக்குடியிருப்பு,களுதாவளை, களுவாஞ்சிக்குடி ஆகிய நான்கு பிரதேசங்களிலும் பாலர் பாடசாலை மாணவர்களின் எதிர்காலம் கருதி நான்கு பாடசாலைகளை சிவாச்சாரிட்ரி அமைப்பின் உதவியுடன் SOND நிறுவனம் செயற்படுத்தி வருகின்றது.

மாணவர்களின் ஆர்வத்தினை அதிகரிக்க செய்யும் வகையிலான கற்றல் நடவடிக்கையுடன் **SOND** நிறுவனமானது மாணவர்கள் நல்ல முறையில் தமது வருங்காலத்தினை அமைத்து கொள்ளும் பொருட்டு அறிவு சார்ந்த திரைப்படங்களை அவரவர் பாடசாலைக்கு கொண்டு காண்பித்து வருகின்றது. அந்த வகையில் இம் மாதம் நான்கு பாடசாலைகளின் பொறுப்பான ஆசிரியருடன் கலந்தாலோசித்து அவர்களின் விருப்பதுக்கமைய இரு திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது.

## இலவசச் செயற்பாடு

வளநிலையத்தில் கணணி கற்றுக்கொள்ள வருகைதரும் சிறுவர்களின் உதவியுடன் வைத்திய சாலைக்கு கையளிப்பதற்காக கழிவுகளாக்கப்பட்ட காகிதங்களை பயன்படுத்தி மாத்திரை போடுவதற்கான சிறிய பைகளும் தயாரிக்கப்பட்டது.



## வளநிலைய பயன்பாடு

எமது அமைப்பானது மக்களின் வாசிப்பு திறன் மற்றும் அனைவருக்கும் கணணி அறிவு ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இலவச நூலக சேவை மற்றும் இலவச கணணி சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த நிலையில் வள நிலையம் மூலமாக இம்மாதம் புதிதாக 04 இளைஞர் யுவதிகளும் , 22 சிறுவர்களும் இணைந்துகொன்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 112 பேர் இம் மாதம் கணணியைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

# SOND யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## Mine Risk Education – மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டம்

- ✓ சரசலை சாவகச்சேரி பகுதியில் வெடிபொருளால் பாதிக்கப்பட்ட எட்டு வயது பாடசாலை சிறுவன் கிசோபன் அவர்களுக்கு சத்து உணவுகள் வழங்கப்பட்டது.
- ✓ வடமராட்சி கிழக்கு வலயக் கல்வி பணிமனை ஆசிரியர்களுக்கான மிதிவெடி விழிப்புணர்வு வழங்கப்பட்டது.
- ✓ மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் அடையாளப்படுத்தப்பட்ட வெடிபொருட்கள்








## Inclusive Economic Development PROJECT - ஒருங்கிணைந்த பொருளாதார செயற்திட்டம்

IED திட்டப் பயனாளிகளுக்கான வியாபார திட்டமிடல் பயிற்சிநெறி சிறுப்பிட்டி பொது மண்டபத்தில் நடைபெற்றது, இப்பயிற்சியின் மூலம் 20 வரையான வியாபார திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

**15.05.2012** தொடக்கம் 18.05.2012 வரை IED திட்டம் தொடர்பான Training மட்டக்களப்பில் நடைபெற்றது. இதில் IED திட்ட பணியாளர்கள் மற்றும் கொத்தணிக்குழு அங்கத்தவர்கள் கலந்துகொண்டார்கள்





## கலந்துரையாடல்

கோப்பாய் மக்கள் மன்றத்தின் ஏற்பாட்டில் வலி கிழக்கு பிரதேச சபையின் அனுசரனையுடன் **SOND** நிறுவனத்தின் வழிகாட்டலுடன் வலி கிழக்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாச தெரிவு 06.05.2012 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதேசசபையில் உப தவிசாளர்,சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், **SOND EU-NSA** திட்ட உத்தியோகத்தர், கள பணியாளர்கள், கோப்பாய் மக்கள் மன்ற பிரதிநிதிகள், மற்றும் சனசமூக நிலைய பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நவாலி இடிகுண்டு நீர்த்தேக்க புணரமைப்பு தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் ஆலோசனைக் கலந்துரையாடல் சண்டிலிப்பாய் பிரதேச சபையில் நடைபெற்றது. இதில் பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவி திட்டமிடல் உத்தியோகத்தர், நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர், விவசாய திணைக்கள உத்தியோகத்தர் **SOND Eu NSA** திட்ட உத்தியோகத்தர்கள், சண்டிலிப்பாய் பிரதேச மக்கள் மன்ற உறுப்பினர்கள் விவசாயிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இத் திட்டத்தின் கீழ் செயற்படும் சங்கங்களில் நடை பெற்ற கலந்துரையாடல் கீழ்வருமாறு.

| இல | சங்கத்தின் பெயர் | திகதி |
|---|---|---|
| 1 | பொன்னாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 10.05.2012 |
| 2 | பெரியவிளான் | 11.05.2012 |
| 3 | சண்டிலிப்பாய் வடகிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்கம் | 18.05.2012 |
| 4 | அச்சுவேலி மேற்கு மளீர் விவகாரக்குழு | 19.05.2012 |
| 5 | கோண்டாவில் வடகிழக்கு மாதர் கிரம அபிவிருத்திச்சங்கம் | 23.05.2012 |
| 6 | நல்லூர் மக்கள் மன்றம் | 19.05.2012 |
| 7 | கோப்பாய் மக்கள் மன்றம் | 18.05.2012 |
| 8 | சங்கிலியன் தோப்பு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் | 30.05.2012 |









# பயிற்சி

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கிறிஸ்தவ உதவு நிறுவனத்தின் உதவியுடன் SOND நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் அரசு சாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்திச்செயற்திட்டத்தில் ( EU NSA) இலக்கு CSOக்களுக்கான ஆவணப்படுத்தல் மற்றும் கணக்கு வைப்பு முறை தொடர்பான பயிற்சியானது EU NSA திட்ட உத்தியோகத்தர் திரு த.ஜயந்தன் அவர்களால் நடாத்தப்பட்டது. இதில் இலக்கு சிவில் சமூக அமைப்புக்களின் நிர்வாக உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயிற்சியைப்பெற்றுக்கொண்டனர்.

காணி சட்டங்கள்,நடைமுறைகள் தொடர்பான பயிற்சிக்கருத்தரங்கு 08.05.2012 அன்று SOND அலுவலகத்தில் கை.மகேஸ்வரன். உதவிக் காணி ஆணையாளர். வட மாகாணம். அவர்களால் நடாத்தப்பட்டது. இதில் மக்கள் மன்ற பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் EU-NSA திட்ட பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூக செயற்திட்டம் தயாரித்தல் தொடர்பான பயிற்சிக்கருத்தரங்கு திரு. ரங்கராஜன் அவர்களால் 26.05.2012 அன்று SOND அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் EU NSA செயற்திட்ட இலக்கு CSOக்களின் பிரதிநிதிகள் ,மக்கள் மன்ற பிரதிநிதிகள் மற்றும் திட்ட பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.







SOND

## காணியின் உரிமைப்பத்திரம் பெறுவதற்கான உதவியளிக்கும் நிகழ்வு.

J/81 கோட்டை முத்தமிழ் சனசமூக நிலைய பிரதேசத்தில் வசிக்கும் யுத்தத்தால் கணவனை இழந்த பெண்ணான திருமதி கேசவன் பவாணி என்பவருக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணியின் உரிமைப்பத்திரம் பெறுவதற்கான உதவியளிக்கும் நிகழ்வு 10.05.2012அன்று பயனாளியின் இல்லத்தில் நடைபெற்றது. அதில் மக்கள் மன்ற பிரதிநிதிகள் NHDA உத்தியோகத்தர்கள் மற்றும் SOND EU NSA திட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.




பெண்களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக்கான வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துக்கள் மற்றும் முச்சக்கர வண்டி ஆகியவற்றில் ஒட்டப்பட்டுள்ளது.






SOND

## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.